Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

பொது சன நூலகம்

ஈழமுரசு

முரசு 2 25-2-1985 திங்கட்கிழமை (மாசி 14-ஜ. ஆகிர் 4) முழக்கம் 21

## பரவலாக பல இடங்களிலும் நடைபெற்ற சூட்டுச் சம்பவங்கள்

யாழ்நகரின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று மாலை பரவலாக இடம் பெற்ற பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் ஆகக் குறைந்தது நால்வர் மரணமாகியிருக்கலாமெனத் தெரியவந்துள்ளது சிலரது சடலங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டன, சில இளைஞர்கள் காயத்துடன் கைதாகி வாகனங்களில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டனர் குருநாதசுவாமி கோவிலடியில் இளைஞர் ஒருவர் வாகனத்திலிருந்து இறக்கிச் சுடப்பட்டதாகவும் தெரியவந்தது.

# பாரதத்தின் 'பிரச்சினை' எச்சரிக்கையை அடுத்து தூதுவர் திலகரத்தின கொழும்பு பயணமானர்!

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும் மற்றும் முக்கிய அமைச்சர்கள், அரசியல் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்துவதற்காகப் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின நேற்று கொழும்பு வந்தார்.

திரு. திலகரத்தின இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரியுடன் இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்தே இலங்கை புறப்பட்டார் இலங்கையின் இனப்பிரச்சினை தீவிரமாகி வருவது கவலைக்குரிய விடயம் என்று அச்சந்திப்பின் போது அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இனப் பிரச்சினைகளைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு தவறுமேயானல் நிலைமை கட்டுமீறிப்போய் இப்பிராந்தியத்தில் பல பிரச்சினைகளைக் தோற்றுவிக்கலாம் எனவும் இந்தியா எச்சரித்துள்ளது.

இப் பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனவும் இதற்கான சூழ்

4-ஆம் பக்கம் பார்க்க

★ வெள்ளிக்கிழமை காலை புளியம்பொக்கணையில் வைத்துக்

# கடத்தப்பட்ட அரசாங்க அதிபர் ஞானச்சந்திரன் சுட்டுக் கொலை!

## இரணைமடு சந்தி பஸ்தரிப்பில் மூளை சிதறிய நிலையில் நேற்று அதிகாலை சடலம் கிடந்தது

(யாழ்., கிளிநொச்சி நிருபர்கள்)

கடந்த வெள்ளிக்கிழமை காலை பரந்தனுக்கும் விசுவமடுவுக்குமிடையிலுள்ள புளியம்பொக்கணையில் வைத்து ஓடும் பஸ்ஸிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே ஞானச்சந்திரன், நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி கண்டி வீதி இரணைமடுச் சந்தியிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்துள் வைத்து இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாம்பல் நிற நீளக்காற்சட்டையும், வெள்ளை நிற 'ரீ' ஷேர்ட்டும் அணிந்தவாறு தலையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்காயத்தினுல் மூளை சிதறிய நிலையில் கிடந்த சடலத்தை இவரது சகோதரரும், மைத்துனரும் அங்கிருந்து காரொன்றில் எடுத்துச் சென்று ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட பின்னர் எந்தத்தகவலும் இவரைப் பற்றி எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை. இவரைக் கொலை செய்தவர்கள் யார் என்பது பற்றியோ அல்லது எதற்காக கொலை செய்யப்பட்டார் என்பது பற்றியோ எந்த அறிவிப்பும் விடுக்கப்படவில்லை.

தமது மகள் சுவேதினியுடனும், முல்லைத்தீவு திட்டமிடல் மேலதிகப் பணிப்பாளர் திரு. கிருபைதிலகனுடனும் பஸ்ஸில் யாழ்ப்பாணம் வரும்போது இவர் கடத்திச் செல்லப்பட்டார். கூடவந்த கிருபைதிலகனும் அவர்களால் கொண்டு செல்லப்பட்டார். தந்தை கடத்தப்பட்ட விடயத்தை மகள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று புகார் செய்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ட்றிபேக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான திரு. ஞானச்சந்திரன் தனது 27 வயதில் முடிக்குரிய சட்டத்தரணி நியமனம் பெற்றுர் சமாதான நீதவானுகவும், மரண விசா

—4 ஆம் பக்கம் பார்க்க

### இவர்கள் மீது விசாரணை

(குருநகர்)

நேற்று மாலை ஐந்து மணியளவில் குருநகர் டவுண் கார் மேல் வீதியில் ரோந்தில் வந்த

—4-ஆம் பக்கம் பார்க்க

### பிரசுரங்கள் எதுவுமில்லாமல் சடலம் நிலத்தில் கிடந்தது

(கிளிநொச்சி)

இரணைமடுச் சந்தியிலுள்ள பஸ் நிலயத்துக்குள் சரிந்த நிலையில் வீழ்ந்து கிடந்த முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் சடலம் நேற்று கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாஜிஸ்டிரேட் திரு. கே. பாலச்சந்திரன் மரண விசாரணை நடத்தினர். ஸ்தலத்திலிருந்து சடலத்தை எடுத்து வந்த திரு ஞானச்சந்திரனின் இளைய சகோதரரான திரு. பூரணச்சந்திரனும், இரண்டு மைத்துனர்மாரும் உடனிருந்தனர்.

சடலம் கம்பம் ஒன்றிலும் கட்டப்பட்டிருக்கவில்லையென்றும். சடலத்திற்குப் பக்கத்தில் பிரசுரங்கள் எதுவுமிருக்க

—4ம் பக்கம் பார்க்க

## கிருபைதிலகன் விடுதலை! வீட்டில் ஆனந்த வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

கொலை செய்யப்பட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபருடன் சேர்த்துக் கொண்டு செல்லப்பட்ட முல்லைத்தீவு மேலதிக திட்டமிடல் அதிகாரி திரு கிருபைதிலகன் நேற்று அதிகாலை கிளிநொச்சியில் வைத்து விடுவிக்கப்பட்டார்.

சைக்கிளொன்றில் ஏற்றி வரப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்துக்கு அண்மையில் இனம்தெரியாதவர்களால் இறக்கிவிடப்பட்ட இவர், அங்கிருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணத்தை காலை ஒன்பது மணியளவில் வந்தடைந்தார்.

—4ம் பக்கம் பார்க்க

3 ஊழியர் ராணுவ விசாரணையில்

## வங்கிப் பணத்துடன் போன வாகனம் மீட்கப்படவில்லை

குருநகர் இலங்கை வங்கிக்குச் சொந்தமான பன்னிரண்டு லட்சம் ரூபா பணம், வங்கியின் கவச வண்டியுடன் சேர்ந்து நேற்று முன்தினம் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக மூன்று வங்கி அதிகாரிகள் தொடர்ந்தும் ராணுவ விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

உதவி முகாமையாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகஸ்தர், வாகன சாரதி ஆகிய மூவருமே விசாரிக்கப்பட்டு வரும் ஊழியர்களாவர். சாரதி வாகனத்துடன் சேர்த்துக் கொள்ளையரால் கொண்டு செல்லப்பட்டாராயினும், பின்னர் விடுவிக்கப்பட்டார்.

—4ம் பக்கம் பார்க்க

ஊழியர் இணைப்புக்குழு நடவடிக்கை:

## லீவில் வந்த ஊழியர்களுக்கு வேலை நீக்கக் கடிதங்கள்

தென்பகுதியில் பணியாற்றி பாதுகாப்புக்காரணத்தி லீவில் வந்துள்ள பல ஊழியர்களுக்கு வேலை நீக்க அறிவித்தல் கிடைத்துள்ளதாகவும் இது பற்றி ஜனதிபதிக்கும் மற்றைய அமைச்சர்களுக்கும் மகஜர் சமர்ப்பிக்க பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மேற்படி குழுவின் செயலாளர் திரு ஐ தி சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஊழியர்களை வேலை இழக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இந்நடவ

—4ம் பக்கம் பார்க்க

அரசாங்கத்தின் புதிய

## குடியேற்றத் திட்டத்துக்கு முஸ்லிம் இளைஞர் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் வாழும் முஸ்லிம்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கொழும்புக்கு வெளியிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஆதலால் அவர்கள் தங்கள் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு கொழும்பில் வாழ்பவர்கள் ஆலோசனை தெரிவிக்க முடியாது என்று கொழும்பு ரன்முத்துஹோட்டலில்நேற்று கூட்டப்பட்ட இஸ்லாமிய இளைஞர்களின் கருத்தரங்கில் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் புதிய குடி

— 4 ஆம் பக்கம் பார்க்க

### ஆள் கடத்தல்

(கல்வியங்காடு)

நேற்று நண்பகல் கல்வியங்காடு சந்திக்கண்மையில் மினி வான் ஒன்றில் வந்த சில இளைஞர்களால் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டார்.

## பிரபல யாழ் சத்திர சிகிச்சை நிபுணருக்கு நேற்றுக் கிடைத்த புதுமையான அனுபவம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவருக்கு நேற்றுமாலை ஆனைப்பந்தியடியில் புதுமையான ஒரு அனுபவம் ஏற்பட்டது

இங்குள்ள தனியார் வைத்திய நிலையமொன்றில் சத்திர சிகிச்சையை முடித்துக் கொண்டு அந்த டாக்டர் தனது கார்நின்ற இடத்துக்கு வந்தபோது அங்கு ஆயுதபாணிகளாக சீருடையில் நின்றவர்கள் அவரது காரை 'இரண்டு மணித்தியாலத் தேவை'க்குக் கேட்டனராம்.

மற்றுமொரு சத்திரசிகிச்சைக்குதான் போக வேண்டுமென்று அந்த டாக்டர் பல தடவை எடுத்துச் சொல்லியும் பலன் கிடைக்கவில்லை. அந்தக் காரை அவர்கள் எடுத்துச் சென்று விட்டனர்.

டாக்டர் திருநெல்வேலியிலுள்ள மற்றொரு வைத்திய

—4ம் பக்கம் பார்க்க

### அகதிகளுக்கு மருத்துவ வசதி

ராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளிலுள்ள இலங்கைத்

—4ம் பக்கம் பார்க்க

# பூநகரி இராணுவ அதிகாரி குறைகளைக் கேட்டறிந்தார்

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அனைத்துக் கிராமசேவை அலுவலர்களையும் பூநகரி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் டி. சில்வா, தமது காரியாலயத்தில் ஒன்றுகூட்டி கருத்தரங்கொன்றை நடத்தினர். பூநகரி உதவி அரசாங்க அதிபர் எஸ். சபாபதிப்பிள்ளை ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டதாக இக் கருத்தரங்கு அமைந்தது.

இக்கருத்தரங்கில் மேஜர் சில்வா ஒவ்வொரு கிராமசேவை அலுவலரையும் அவரது பிரிவு மக்கள் அனுபவிக்கும் உணவு, மருத்துவம், போக்குவரத்து பற்றிய குறைபாடுகளைக் கூறுமாறு வேண்டி அவற்றைக்கேட்டறிந்தார். இக்குறைபாடுகளுக்கு தக்கநிவாரணம்காணத் தான் உடனடி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

கடலில் செல்லும் போது வானத்திலிருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதலிலிருந்து தப்ப தன்னால் உதவமுடியாதென்றும் டி சில்வா கூறினர். இத்தகைய குறைபாடுகள் பற்றி தமது கவனத்திற்கு உடனுக்குடன் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

மேஜர் டி சில்வாவினது இந்த நடவடிக்கை ஒரு சிறந்த முன்மாதிரியாக மக்கள் பலராலும் பாராட்டப்பட்டுள்ளது தமது அத்தியாவசிய சேவைகள் இனி நிறைவேறும் என நம்பிக்கை கொண்ட மக்கள் அவற்றை நிறைவேற்றுவதில் பூநகரிஇராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் ஆவல் இதனால் வெளிப்படுகிறதென்றும் குறிப்பிட்டனர்.

## அச்சுவேலி பிரஜைகள் குழு

அச்சுவேலிக்கென பிரஜைகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. டி எம். யோசேப் தலைவராகவும், வில்லிசைக் கலைஞர் கே. என். கணபதிப்பிள்ளை சின்னமணி செயலாளராகவும், இரா. ஜெகஜோதி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது

## மாணவருக்குப் பாதுகாப்பு

(உடுப்பிட்டி)

இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த சாதாரண மீள் பரீட்சைக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியை நிலையமாகக் கொண்டு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கென இப் பகுதி இளைஞர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளைக் கொண்ட பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி அதிபர் திரு சி. வின்சென்ற் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## பிறந்தநாள் வாழ்த்து

✱ உடுவில் மேற்கு முருகவேள் நிர்மலா தம்பதிகளின் மகள் ஜசோதா இன்றுதனதுமுதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ ஊர்காவற்றுறை கிழக்கு, குணரத்தினம் - கண்ணம்மா தம்பதிகளின் மகன் வசந்தன் இன்று தன் பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ். மதவுபுலேன், சச்சிதானந்தம் மகேஸ்வரி தம்பதிகளின் மகன் கண்ணன் இன்று தன் பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ கல்வியங்காடு சோமசேகரம் சுகுமாரி தம்பதிகளின் மகள் சுபோதினி இன்று தன் மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ ஊரெழு மேற்கு, தம்பிராசா ரேயினிதேவி தம்பதிகளின் மகள் காயித்திரி இன்று தன் ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✱ யாழ். ஏ பி லேன் ருஸிக் சித்திசமீமா தம்பதிகளின் மகள் சஹீலா பர்வீன் இன்று தன் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ பாரதி லேனைச் சேர்ந்த பிலேந்திரன் பரமேஸ்வரி தம்பதிகளின் மகள் அனித்தா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கோப்பாய், டேவிற் கமலா தம்பதிகளின் மகள் யூடிற் ரெனிஸ்ரா இன்றுதனதுநாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

## வரி விளம்பரம்

### தேவை

கணக்கியல் அறிவும், ஆங்கிலத் தட்டச்சு அனுபவமும் உள்ள பெண் இலிகிதர்கள் தேவை. வேலைஅனுபவம்உடையோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பிக்கவும்; தமிழர் நிதியம் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### கல்வி

''பாலர் ஆசிரியர் பயிற்சி 1985''க்குரிய பயிற்சி வகுப்பு மார்ச் இரண்டாந் திகதி ஆரம்பமாகின்றது. ஜி சி, ஈ சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம், பாலர் ஆசிரியர் சங்கம்'' 610 (418), கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.

### பஞ்சாங்கம்

குரோதன வருஷ (1985-1986) வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது, விலை ரூ. 15/ வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் தொலைபேசி : 23631

### விற்பனைக்கு

கொல்லப்பட்டடை ஆயுதச் சாமான் இங்கே விற்கப்படும். விற்பனை செய்பவர் இராசரெத்தினம். விலாசம்: இலக்கம் 56 செபஸ்தியன் வீதி

### விற்கவும் - வாங்கவும்

சாய்ப்புச் சாமான்கள் - பல சரக்குகள்-பிடவைகள்-பீடிகள் சுருட்டுக்கள் - பீடாக்கள் ஏல விற்பனை நிலயம் கோப்பாய்.

# கெற்பலி குடியேற்ற திட்டம் பயிர்ச் செய்கை ஆரம்பம்

(மிருசுவில்)

மிருசுவில் - கெற்பலியில் உள்ள அகதிகள் குடியேற்றத் திட்டத்திலுள்ளோர்களுக்கு விவசாயம் செய்யவென வழங்கப்பட்ட காணிகளில் தற்போது பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னேற்பாடாக இவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பற்றைக்காணிகள் அண்மையில் மிருசுவில், உசன் பகுதி இளைஞர்களால் சிரமதான முறையில் துப்புரவு செய்யப்பட்டு பண்படுத்திக் கொடுக்கப்பட்டன பயிர்ச் செய்கைக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் இப்பகுதி விவசாய விரிவாக்க சேவையாளர் செய்து வருகின்றார்.

கைதடியில் இயங்கி வந்த அகதிகள் முகாம மூடப்படுவதற்கு ஏதுவாக அம்முகாமிலிருந்தோரில் அறுபது குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட ஊழியர்கள் விபரப் பட்டியல்

1983 ஜூலையில் பாதிக்கப்பட்டு வேலையை இழந்த அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான இளைப்பாற்றுத் திட்டததை தயாரிப்பதற்கு வேண்டிய சகல தகவல்களையும் கொண்ட விபரப்பட்டியல் ஒன்று பாதிக்கப்பட்ட ஊழியர் குழுவினால் யாழ் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபரும், பிரதி அத்தியாவசிய சேவைகள் செயலாளர் நாயகம் திரு. தர்மபாலனும் துரித நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். அத்துடன் வேலையை இழந்துள்ள ஊழியர்களின் உடனடி நிவாரணததிற்காக பிரத்தியேக மகஜர் ஒன்று அரசாங்க அதிபர் ஊடாகபுன நிர்மாண அமைச்சிறகும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## சம்பளம் இப்படி வருகிறது

(மானிப்பாய்)

தற்போது தபாலகங்கள் சீராக இயங்காததாலும் பணம் பெற வங்கிக்கு செல்ல மக்கள் தயங்குவதாலும் வெளிமாவட்டங்களில் பணிபுரிபவர்கள் தங்கள் வீடுகளுக்கு சம்பளப் பணத்தை அனுப்புவதிலேற்படும் சிரமங்களை தவிர்ப்பதற்காக புதிய முறையை கையாளுகின்றனர் தாங்கள் அனுப்பும் சம்பளப் பணத்துக்கு பெறுமதியான முத்திரைகளை வாங்கி அனுப்பி விடுகின்றனர். இம் முத்திரைகளை ''பாஸ்போட்'' எடுப்பவர்களும் சட்டத்தரணிகளும் வாங்குகின்றனராம் சிலர் முத்திரைகளை விற்க நாளாந்தம் அலைவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

கலர் பிலிம்
PROCESSING PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

# அடையாள அட்டையை எவ்வாறு, எங்கு பெறுவது?

(நேற்றைய தொடர்ச்சி)

(30) பிரதி அடையாள அட்டைகளைப் பெறுதல் எப்படி? தொலைந்தவற்றுக்கு பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தில் பொலிஸ் நிலைய அதிபரின் அறிக்கையையும மிகவும் முக்கியம் இதற்குரிய முத்திரை கட்டணம் 15/-. தொலைந்த அடையாள அட்டையின் இலக்கத்தைக்கொடுப்பதுடன், உரிய ஆவணங்களின் மூலப்பிரதிகளையும கிராம சேவை அலுவலரிடம் சமர்ப்பித்துப் பின் உதவி அரசாங்க அதிபரினால் இவ்விண்ணப்பங்கள் நேரடியாக கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களததிற்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும். இதற்குரிய பதிவு அஞ்சல் கட்டணத்தை விண்ணபபதாரியே பொறுப்பார். பிரதி அடையாள அட்டை பெறுவதில் கால தாமதம் ஏற்படும் இடத்து விண்ணப்பதாரி நேரடியாக ஆட்பதிவு ஆணையாளருடன் விண்ணபப இலக்கம், உதவி அரசாங்க அதிபரினால் அனுப்பிய விபரம் முதலியவற்றுடன் தொடர்பு கொள்ளலாம். இந்த நடைமுறையையே திருத்தற்குரிய விண்ணப்பங்களுக்கும் கையாளுதல் வேண்டும. இவ் விண்ணப்பங்களுடன் கையிலிருக்கும் அடையாள அட்டையும் இணைத்தல் வேண்டும். இதற்குப் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி தேவையில்லை.

(31) ஒருவரின் அடையாள அட்டையை இன்னொருவர் வைத்திருப்பது குற்றமா? ஆம் அடையாள அட்டைக்குரியவரே அடையாள அட்டையை வைத்திருத்தல் வேண்டும்.

(32) யாழ்ப்பாணத்தில்வசிக்கும் ஒருவர் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று அடையாள அட்டையைப் பெற முடியுமா? அடையாள அட்டை மிக அவசரமாகத் தேவைப்படும் இடத்து அதற்குரிய விண்ணப்பம் யாழ். அலுவலகத்தால் அனுமதிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பிய விபரத்தைகப்பெற்று அவ்விடம் சென்று மிக அவசர தேவையை ஒரு விண்ணப்பதாரி நிரூபிப்பாரேயானால் அங்கு அடையாள அட்டையை அவரால் பெற முடியும். அல்லாதவிடத்து முடியாது.

(33) வெளிநாடு செல்லும் ஒருவர் தன்னுடைய அடையாள அட்டையை தன்னுடன் எடுத்துச் செல்ல அனுமதிப்பார்களா? வெளிநாட்டில் ஆறுமாதங்களுக்கு மேல் தங்குபவர்கள் தங்களது அட்டைகளை ஆட்பதிவு ஆணையாளரிடமோ அல்லது நாட்டை விட்டு வெளியேறும் போது குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடமோ ஒப்படைத்தல் வேண்டும்.

(34) கண்டெடுத்த அடையாள அட்டையை யாரிடம் ஒப்படைத்தல் வேண்டும்? கொழும்பு ஆட்பதிவு ஆணையாளரிடம், அல்லது அண்மையுள்ள பொலிஸ் நிலைய அதிபரிடம், அல்லது யாழ். கச்சேரி ஆட்பதிவு நிர்வாக உத்தியோகத்தரிடம்.

(35) மாணவர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை எத்தனை வருடங்களுக்குச் செல்லுபடியாகும்? அடையாள அட்டையின் செல்லுபடியாகும் கால எல்லை இன்னும் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகையால் மாணவர்கள் பாடசாலை விலகியபின்பும் இவ்வட்டைகளைத் தொடர்ந்தும் பாவிக்கலாம். படத்தோற்றம், தொழில் நிலை, முகவரி, விவாகநிலை முதலியவற்றில் மாற்றங்கள் ஏற்படும் போது மட்டும் பிரதி அட்டைக்கு சிவப்புப் படிவத்தில்விண்ணப்பித்தல்வேண்டும்

# இளைஞர்கள் ஒன்று திரண்டு வீதிகளைச் செப்பனிட்டனர்

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ்நிலையமும் அதனுடன் இணைந்த பிரதான வீதியும் மீண்டும் புதியதோற்றம் பெற்றுள்ளது. சிலவருடங்களாக அச்சுவேலி பஸ்நிலையமும் அதனுடன் இணைந்த பிரதான வீதியும் முற்றாக பழுதடைந்து பாவனைக்கு லாயக்கற்றதாக சதுப்பு நிலமாக காட்சி அளித்தது. இதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் அனைவரும் பல்வேறு சிரமங்களை நாளாந்தம் அனுபவித்து வந்தனர்.

அண்மையில் இளைஞர்களிடையே ஏற்பட்ட ஒன்றுபட்ட எண்ணம் சீர்குலைந்தவீதியை புதுத் தோற்றம் பெறச் செய்துள்ளது ''வீதி திருத்துவது போல் இளைஞர்கள் ஒன்றுபட்டு உழைத்தால் தமிழ் மக்களின் சீர்குலைந்தவாழ்வு திருந்தும்'' என பொதுமக்கள் ஆசி வழங்கி வீதித் திருத்த வேலைகளிற்கு ஒத்துழைத்தனர். அடுத்தநாள் அச்சுவேலிக்கு கவச வாகனம் சகிதம் நடந்து வந்தபாதுகாப்பு படையினர் சிரமம் இன்றி திருத்திய ''புதிய வீதியால் சென்று தேடுதல் நடத்தினர்'' யாரையும் துன்புறுத்தவில்லையாம்.

EUROLANKA TRAVELS AND TOURS LTD.

✱ யாழ்ப்பாண மக்களின் வசதியை முன்னிட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கும் எமது ஸ்தாபனம் இப்பொழுது யாழ். நகரிலும் கிளையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலகின் எல்லாப் பாகங்களுக்கும் பேர்லின் (BERLIN) உட்பட, மற்றெல்லா ஸ்தாபனங்களையும்விட மிகக் குறைந்த விலையில் விமான டிக்கட்டுக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்,

BERLIN கட்டணம்:
AIR LANKA சேவையில் (வியன்னா வழியாக)
AEROFLOT சேவையில் (மொஸ்கோ வழியாக)
ஒவ்வொரு திங்கட்கிழமைக்கும்
ஆசனப் பதிவு செய்து கொடுக்கப்படும்

எமது சேவையின் விபரங்கள்;
1 உங்கள் பயணம் முடியும் வரைக்கும் எமது பிரதிநிதிகளின் 24 மணி நேர ஒத்துழைப்பு
2 பிரயாணக் காசோலைகள் (TRAVELLERS CHEQUE) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.
3. விமான ஆசனப் பதிவுகள் (CONFIRMATION) மற்றும் சகல பிரயாண தேவைகளும் செய்து கொடுக்கப்படும்.
4. கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலயம் செல்வதற்கான போக்குவரத்துச் சேவை.

குறிப்பு: கமிஷன் அடிப்படையில் வேலை செய்யக்கூடிய கன்வஸர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

மேலும் விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:
EURO LANKA TRAVELS LTD.
40, 3rd, Cross Street, JAFFNA.
தலைமை அலுவலகம்:
EURO LANKA TRAVELS & TOURS LTD
6A, Daisy Villa Avenue, COLOMBO-4,
Telephone: 585990, 589992

ஈழமுரசு



### உதய சிந்தனை

உனக்குரிய தருமத்தை நோக்குமிடத்தும் நீ பின்னிடுவதற்கு உரியவனில்லை. ஏனெனில் தர்ம யுத்தத்தை விடச்சிறந்தது வேறொன்றுமில்லை

—பகவத்கீதை.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

25-2-85 திங்கட்கிழமை (இரத்தாக்ஷி மாசி 14)

# பஞ்ச பூதங்களாலும் அழிக்க முடியாதது!

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்றபோது குழப்பப்பட்ட அல்லது தடைப்பட்ட ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சை மீண்டும் நாளை மறுதினம் முதல் நடைபெறவுள்ளது.

போதிய முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டு, சகலரதும் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்பட்டு, எந்தத் தடங்கலுமின்றி இப்பரீட்சையை நடத்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர்களும், அதிகாரிகளும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

தமிழ் மாணவர்களின் கல்வி எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் மக்கள் காட்டி வரும் அக்கறையை அன்றாடம் வெளிவரும் செய்திகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

தமிழ் மக்களிடையே இயங்கிவரும் சகல இளைஞர் அமைப்புக்களும் பரீட்சை தங்குதடையின்றி நடைபெற தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

பரீட்சைகளைக் குழப்புபவர்கள். 'துரோகிகள்' பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்று சில அமைப்புக்கள் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளன.

'பரீட்சையில் கைவைக்காதீர்! மாணவர் கல்வியைப் பாழாக்காதீர்' என்று பல்வேறு மாணவர் இயக்கங்களும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளன.

பரீட்சையை வெற்றிகரமாக நடத்தி முடிக்க பெற்றார், பழைய மாணவர் அனைவரும் ஒன்று கூடி பாடசாலைகள் தோறும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் எம். சிமியாம்பிள்ளை விடுத்த வேண்டுகோள் நல்ல பலனை அளித்துள்ளது.

பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலைகள் தோறும் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் வேலைகள் நடைபெற்றுள்ளன.

பரீட்சை மண்டபங்களுக்குத் தகுந்த பாதுகாப்பினை வழங்கும் பணியைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்பேற்றுள்ளன என்ற செய்தி அனைவருக்கும் ஆறுதலையும், மகிழ்வினையும் கொடுக்கின்றது.

பிரஜைகள் குழுக்கள் அந்தந்தப் பகுதிப் பாடசாலைகளுடன் இணைந்து பரீட்சையைப் பாதிப்பின்றி நடத்தப் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவதென்று தீர்மானம் எடுத்துள்ளது.

இளைஞர்கள் அனைவரும் கட்டுப்பாட்டுடன் நடந்து பரீட்சையைக் குழப்பமின்றி நடத்த முன்வரவேண்டும் என்று பிரஜைகள் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பரீட்சையின் வெற்றிக்குச் சகலரதும் ஒத்துழைப்பையும் கோரியுள்ளனர் அதிபர்களும், ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும்.

"தமிழரின் உயிரைப் பறிக்கலாம், உடைமைகளை எரிக்கலாம். உண்ண உணவின்றித் தவிக்கவைக்கலாம், ஆனால், தமிழரின் அழிக்க முடியாத செல்வம் கல்விச் செல்வம்" என்பதனை அடிநாதமாகக் கொண்டு, பரீட்சையை அணுவளவு கூட தடங்கலின்றி நடத்த அனைத்து மக்களும் விரும்புகின்றனர் என்பதனையே சகல நடவடிக்கைகளும் எடுத்துக் காட்டுகின்றன.

பஞ்சபூதங்களாலும் கூட அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை, காவல் பூதங்களிலிருந்து காப்பதற்கு இன்று தமிழ் மக்கள் எடுக்கும் நடவடிக்கைகள், வேறெந்த இயக்கங்களாலும் சிதறடிக்கப்படக் கூடாது என்பதே ஒவ்வொருவரதும் வேண்டுகோளாகும்.

மீண்டும் ஒரு தடவை இப்பரீட்சை குழப்பப்படுமானால் அல்லது தடைப்படுமானால், தமிழ் மாணவர் சமூகம் 'கொலை' செய்யப்படுவதற்குச் சமமாகவே அதனை நாம் கருதவேண்டும்,

உயிர்க் கொலையையும் துச்சமென மதித்து, அன்றாடம் வாழ்க்கையுடன் போராடும் தமிழ் மாணவர்களின் கல்வியும் கொலை செய்யப்படவேண்டுமா?

டிசம்பரில் நடந்தவைகளை மக்கள் மன்னித்துவிட்டனர். நடக்கப் போவதைச் சரியாக நிறைவேற்ற ஒன்று கூடியுள்ளனர்.

தமிழ் சமூகம் கட்டுப்பாடானது என்பதை ஒரு தடவை நிரூபிப்பது இளைஞர் கரங்களில் தான் தங்கியுள்ளது.

நினைத்தால் முடியாதா?

---

தென் லெபனானில் பழிக்குப் பழி முயற்சியாக

# கார் - வீடுகள் குண்டுகள் வைத்து இஸ்ரேல் இராணுவத்தால் தகர்ப்பு!

(ஜெருஸலம்)

தனது துருப்புகளை லெபனான் படைகள் தாக்கியதனையடுத்து ஆவேசம் கொண்ட இஸ்ரேலிய இராணுவத்தினர் சியாக் கிராமத்தில் பெரும் பதில் தாக்குதல் நடத்தினர் என ஐ. நா அதிகாரிகள் தெரிவித்தனர். இங்கு இரு வீடுகள், ஒரு கார் ஆகியவற்றை இஸ்ரேலிய இராணுவத்தினர் வெடி வைத்துத் தகர்த்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. இஸ்ரேலியரின் இத்தாக்குதல்கள் இடைவிடாது மேற்படி பகுதியில் நடந்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தென் லெபனானில் ஐந்தாவது தினமாக இஸ்ரேலியத் துருப்புக்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இஸ்ரேலியர் தரப்பில் பன்னிரண்டு வீரர்கள் மாண்டுள்ளனர். கேர்ணல் ஒருவரும் மேஜர் ஒருவரும் இதில் அடங்குவர். இவ்விடத்திலிருந்து வாபஸ் பெற இஸ்ரேல் திட்டமிட்டிருந்தது

தென் லெபனானிலுள்ள ஷிங் கிராமங்கள் ஊடாக நுழைந்த இஸ்ரேல் இராணுவத்தின் நடவடிக்கைக்கு முடிவுகட்ட சர்வதேச தலையீடு அவசியமென லெபனான் ஜனாதிபதி அமீன் ஜெமாயல் கோரிக்கை விடுத்துள்ளார். பதினைந்து பாலஸ்தீனரும் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனராம்.

---

மார்ச்சில் விஜயம்

## வளைகுடா யுத்த நிலை குறித்து ஐ.நா. செயலர் ஆராய முடிவு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் திரு. குவெல்லர் வளைகுடா நாடுகளுக்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபியா, கட்டார் முதலான நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ள அவர் ஈரான், ஈராக் போர் உக்கிரமாக நிகழும் வளைகுடா நிலை குறித்து மட்டுமன்றி பல விடயங்கள் குறித்தும் ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ் விஜயம் மார்ச் மாதம் மேற்கொள்ளப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

---

பங்களாதேஷ் வேட்புமனு ஒத்திவைப்பு

## தமக்கு கிடைத்த வெற்றி என எதிர்க்கட்சிகள் பெருமிதம்

(டாக்கா)

பங்களாதேஷ் பொதுத்தேர்தல் நடத்துவதற்குரிய வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான திகதியை ஜனாதிபதி எர்ஷாத் ஒத்திவைத்துள்ளது எதிர்க்கட்சிக் கூட்டணிகளுக்கு ஊக்கத்தைக் கொடுத்துள்ளது.

இந்த வேட்புமனு ஒத்திவைப்பு தமக்குக் கிடைத்த வெற்றி என அவை பெருமிதம் கொண்டுள்ளன.

---

## ரூ பதினொரு கோடி கடத்தல் தங்கம் கைப்பற்றல்

(புதுடில்லி)

பாரதத்தில் இவ்வருடத்தின் முதலிருமாதங்களில் பதினொரு கோடி ரூபா கடத்தல் தங்கம் பிடிபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் இம்மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் பத்துக் கோடி ரூபா கடத்தல் தங்கம் கைப்பற்றப்பட்டதாக நேற்று புதுடில்லியில் இருந்து வெளியான தகவல் ஒன்று தெரிவித்தது.

---

லெபனான் விமானக் கடத்தல்

## பெய்ரூட்டில் விட்டுத் தப்பி ஓடியவர் ஓர் அதிகாரியாம்

(பெய்ரூட்)

பெய்ரூட்டிலிருந்து பாரிஸிற்குப் புறப்பட்ட லெபனான்விமானத்தைக் கடத்திச் சென்ற நபர் சைப்பிரஸ் சென்று பின் பெய்ரூட்டிற்கே திருப்பிக் கொண்டுவந்து விட்டுத் தப்பியோடிவிட்டார் என அறிவிக்கப்படுகிறது.

விமானம் கடத்தப்படுவதற்கு முன்னரே விமானத்தில் பயணம் செய்யவிருந்த நூறு பயணிகளும் தப்பித்துக்கொண்டனராம்,

பெய்ரூட் விமான நிலையத்தில் காவலில்லாத ஓடு பாதை ஒன்றில் விமானத்தை நிறுத்தச் செய்து தப்பியோடிய பிரஸ்தாப நபர் குடியமர்வு பந்தோபஸ்து அதிகாரி ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது,

இம்மாதத்தில் பெய்ரூட்டில் நிகழ்ந்த இரண்டாவது விமானக் கடத்தல் இதுவாகும்,

---

பிரதமர் ராஜீவ் எச்சரிக்கிறார்

## நாட்டை சீரழிக்கும் சக்தி தொடர்ந்து செயற்பாடு

(லக்னோ)

"பாகிஸ்தானில் காவலில் உள்ள பாரத விமானக் கடத்தல்காரர்களுக்குச் சட்ட உதவியளிக்க அகாலிதள் முன்வந்திருப்பது வேதனைக்குரியது" என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பொதுக் கூட்டங்களில் பேசுகையில் கூறினார்,

"நாட்டைச் சீர்குலைக்கும் சக்திகள் இன்னமும் நாட்டின் உள்ளேயும், வெளியேயும் இருக்கின்றன," என்று மக்களை இக்கூட்டத்தில் எச்சரித்தார்.

பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்க உதவுமாறு அவர் சீக்கிய சமூகத்தவருக்கு வேண்டுகோள் விடுத்தார்,

### முதல்வர் கருத்து

"பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் நீங்க கிராம ரீதியாகத் தொழில்நுட்ப அறிவு ஊட்டப்பட வேண்டும்" என்று மேற்கு வங்காள முதல்வர் கூறினர்.

---

## இன்று பாகிஸ்தான் பொதுத் தேர்தல்

(இஸ்லாமாபாத்)

எட்டாண்டுகளின்பின் இன்று பாகிஸ்தான் பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. பல எதிர்க்கட்சித் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இங்கு தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

---

அமெரிக்காவுடனான தகராறு:

## சோவியத் யூனியன் தலையிட கூடாது-நியுஸிலாந்து உறுதி

(லண்டன்)

தனது துறைமுகத்தில் அணு ஆயுதங்கள் தாங்கிய கப்பல்களை அனுமதிப்பதில்லை என்ற அமெரிக்காவுடனான தகராறில் தலையிட வேண்டாமென நியுஸிலாந்துப் பிரதமர் திரு. டேவிட் லாங்கே சோவியத் யூனியனைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. லாங்கே அமெரிக்க விஜயம் மேற்கொள்ளவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

ஈரான் - துருக்கி இணைந்து

## குழாய்ப் பாதை வழியாக எண்ணெய் வர்த்தகம்?

(லண்டன்)

ஈரானும், துருக்கியும் குழாய்ப்பாதை வழியாக எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது,

இத்திட்டத்திற்கு கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக துருக்கிய வெளிநாட்டமைச்சர் திரு. குலோ தெரிவித்தார்.

எண்ணெய் வர்த்தகத்தில் இரு நாடுகளும் மேற்கொள்ளவுள்ள இப்புதிய முறை எத்துணை தூரம் சாத்தியமாகும் என்பது குறித்து முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை.

---

## தமிழக சட்டசபை இன்று கூடுகிறது

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவையின் கூட்டம் இன்று காலை ஆரம்பமாகும். பதில் சபாநாயகர் திரு. பா. உ. சண்முகம் தலைமையில் புதிய உறுப்பினர்கள் சபையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வர்.

புதிய சபாநாயகர், துணை சபாநாயகர் தெரிவுகள் புதன்கிழமை நடைபெறவுள்ளன.

ஈழமுரசு

## அரியாலையில் கசிப்பு வடிப்பவர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் கசிப்புக் காய்ச்சி, விற்பனை செய்யும் இடங்கள் சம்பந்தமான சகல பட்டியல்களையும் பல சிரமத்தின் மத்தியில் தயாரித்து யாழ். அரசாங்க அதிபர் ஊடாகக் கலால் பகுதிக்கும், கூட்டுறவு ஆணையாளருக்கும் அனுப்பி வைத்துள்ளது. சங்க வளர்ச்சி, சமூக நலன், சங்க ஊழியர்களின் பொருளாதார நன்மை என்பனவற்றைக் கருத்தில் வைத்தே இதனைச் செய்துள்ளதாகத் தலைவர் தெரிவித்தார். சட்ட நடவடிக்கை மூலம் கசிப்புக் காய்ச்சுதலை ஒழிக்க மேற்குறிப்பிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களெனத்தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

மாணவர் பேரவை கோரிக்கை:

# ஜீ. சி. ஈ. பரீட்சை ஒழுங்காக நடைபெற அனைவரும் ஒத்துழைப்புத் தாருங்கள்!

கடந்த காலச் சம்பவங்களை மறந்து, நடக்கவிருக்கும் பரீட்சைகளைக் குழப்பாமலும், பாடசாலைகளை உயர்கல்வி நிறுவனங்களை கொள்ளையிடாமலும், மாணவர்களின் கல்விக்கு இடையூறில்லாமலும் நடந்து கொள்ளுமாறும், நாளை மறுதினம் ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை ஒழுங்காக நடைபெற அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் ஐக்கிய மாணவர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்வேறு இன்னல்களையும் அவலங்களையும் அனுபவித்து ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழினத்தின் நியாயமான சில உரிமைக்குள் கல்வி கற்கும் உரிமை பிரதானம் பெறுகிறது இந்த இனத்தின் அழியாத சொத்து என சொல்லப்படும் கல்வியும் இன்று சீரழிந்த நிலைக்கு உட்பட்டுள்ளது.

அரசின் தரப்படுத்தல் போன்ற அநியாய வழிமுறைகளால் ஒரு விற்பனைப் பண்டமாக்கப்பட்டு 'கோட்டா' முறைகளில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் இழிநிலை ஒருபுறமிருக்க, எம்மவர்களாலேயே எந்த அடிப்படையும் இல்லாமல் குழப்பப்பட்டுக் கொண்டிருக்கும் பரிதாபநிலை மறுபுறமாக நம்மைக் கவலைக்குள்ளாக்குகிறது.

1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதக பொ. த. (உயர்தரப்) பரீட்சை அப்போதைய யூலைக் கலவரத்தால் குழம்பிப்போனது. அதே வருட டிசம்பர் மாத சாதாரணதரப் பரீட்சை நிலையங்களுக்குள் புகுந்து வினாவிடைத் தாள்களைப் பறித்தவர்களால் குழப்பப்பட்டது 1984 ஆகஸ்ட் மாத உயர்தரப் பரீட்சை மாணவர்களின் பகிஷ்கரிப்பினால் பாதிக்கப்பட்டு குழம்பிப்போன நிலையில் எழுதப்பட்டதாக அமைந்தது. இவற்றுக்கிடையே கலவரங்கள் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் என்ற ஒரு அமைப்பே உருவாகும் அளவிற்கு பல்கலைக்கழக கல்வி நடுத்தெருவிற் கொண்டுவரப்பட்டது

இந்தப் பட்டியலில் இடம்பெற்ற இத்தனை இடர்பாடுகளாலும், குழப்பங்களாலும் சாதிக்கப்பட்டது என்ன? நமக்கு முன்னேயுள்ள மிகப்பெரிய கேள்வி இதுதான். இத்தனை பிரயாசைப்பட்டு ஒரு இனத்தின் அழியாத சொத்து எனப்படும் கல்வியைக் கரைத்து விடச் செய்த இந்த முயற்சிகள் அனைத்தினது மொத்த விளைவு இதுவரையிலும் பூஜ்யம்தான் என்னும் போது வேதனைதான் மிஞ்சுகிறது. இனியும் ஏற்படக்கூடிய இத்தகைய குழப்பங்களும் இடையூறுகளும் இவ்வாறான வேதனைககே வழிகாட்டும் என்னும் போது இது அவசியம்தானா என்பதும் அதைத்தைத் தீர்மானிக்க முடியாத நிலையில் இதை அமுல் செய்ய வேண்டுமா என்று கேள்வியும் வேண்டாம் என்ற விவேகமான பதிலையே தருகின்றன எனவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் ஆறு விளக்கு

திருமலை துறைமுகத்தில் ஆறு புதிய சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அண்மைக் காலமாக இயங்கிருக்கும் விளக்குகள் சிலரால் சேதப்படுத்தப்பட்டதையடுத்து இருபது லட்சம ரூபா செலவில் இவை அமைக்கப்பட்டன. மேலும் விசமிகள் எவரும் இவற்றை சேதமாக்க முயற்சித்தால் உடன் நச்சு வாயு அதிலிருந்து வெளியாகும எனவும அறிவிக்கப்பட்டுள்ளது

## கேரள முதல்வர் எம். ஜி. ஆர். சந்திப்பு

கேரள முதலமைச்சர் திரு. கருணாகரன நேற்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை அவரது இல்லத்தில வைத்து சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பு 30நிமிடங்களவரை நீடித்தது.

## படுகொலை

ராஜஸ்தான் மாநிலத்தில் தீப என்ற தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் கொலையுண்டதையடுத்து, நேற்று அங்கு இடம்பெற்ற வன்செயல்களில பலர் கொல்லப்பட்டதாகவும் ஊரடங்குச் சட்டம அமுல் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது

ஈ. பி. ஆர். எல். எப. வேண்டுகோள்:

# பரீட்சையை குழப்புவோர் எமது பெயரை பயன்படுத்தினால் பிடித்துத் தாருங்கள்!

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ பி. ஆர் எல். எப்) பெயரைப் பயன் படுத்தி யாராவது ஜீ சி ஈ. பரீட்சையைக் குழப்ப முயன்றால் அவர்களை உடன் தங்களிடம் ஒப்படைக்குமாறு மேற்படி முன்னணி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈ. பி. ஆர். எல். எப். பரீட்சை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த சில தினங்களில் நிகழவுள்ள க. பொ. த. சாதாரண பரீட்சையை ஒழுங்காக நடாத்த அனைவரும ஒத்துழைக்குமாறு நாம் வேண்டுகிறோம். எமது இலட்சியத்துக்கும் இப்பரீட்சையை குழப்புவதற்கும் இடையில் எவ்வித தொடர்பும் இருப்பதாக நாம் கருதவில்லை.

அநாவசியமான முறையில் எவரும் எமது மாணவர்களின் கல்வியில் தலையிட்டு அவர்களது கல்வியை பாழடிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாம் என பகிரங்கமாக வேண்டுகிறோம். இங்ஙனம் அநாவசியமான தலையீடுகள் எமது இறுதி இலட்சியத்தை அடைவதற்கும் குந்தகமாய் அமையும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### கடத்தப்பட்ட....

—1-ஆம பக்கத் தொடர்

ரணை அதிகாரியாகவும் பணியாற்றிய இவர் பின்னர் நீதவானாக நியமிக்கப்பட்டு பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மூதூர் ஆகிய இடங்களில் கடமையாற்றினர்.

1930ம் ஆண்டு ஜூலைமாதம் 16ம திகதி சாவகச்சேரியில் பிறந்த ஞானச்சந்திரனுக்கு மனைவியும் ஆறு பிள்ளைகளும உண்டு.

முலலைத்தீவு அரசாங்க அதிபராக கடந்த சில ஆண்டுகளாக பணியாற்றிய இவர் நல்லை ஆதீனம், கைதடி சைவ அநாதைகள் இல்லம், நெல்லியடி வேதாரி ஆச்சிரமம், செல்வச்சந்நிதி மயிலவாகனம் மடம் உட்பட பல மத ஸ்தாபனங்களில் பொறுப்பான பதவிகளை வகித்துவந்தார்.

இவரது இறுதிக் கிரியைகள் சாவகச்சேரியிலுள்ள தந்தையின் வீட்டில் இன்று மாலை மூன்று மணிக்கு நடைபெற்று, கண்ணுப்பிட்டி மயானத்தில தகனம செய்யப்படும்.

### குடியேற்ற...

—1ம் பக்கத் தொடர்

யேற்றத் திட்டம் தமிழ் மக்களை மட்டுமன்றி முஸ்லிம்களையும் வெகுவாகப் பாதிக்கப் போவதாகத் தெரிவித்த கூட்டத் தலைவர் ஜனாப். எம். ஐ. எம். மொஹிதீன, தமிழர்களைப் போல முஸ்லிம்களும் தமது உரிமைக்காக ஒன்றுபட்டு போராட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

பேச்சுவார்த்தை மூலம்பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதாகக் கூறிக்கொண்டு, பொது மககளுக்கு ஆயுதம் வழங்குவதை ஏற்க முடியாது என்று தெரிவித்த ஜனாப மொஹிதீன், பிரிவினையை முஸ்லிமகள ஆதரிக்காத போதிலும், அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறையுண்டு என்று தெரிவித்தார்.

முன்னாள் செனட்டர் ஜனாப் மசூர் மௌலானா, ஜனாப் நிலாம்டீன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

### பிரசுரங்கள்....

1- ஆம் பக்கத் தொடர்

வில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. சடலத்தின் தலையில் மட்டும் சூட்டுககாயம் காணப்பட்டிருந்தது.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் பிற்பகல் இரண்டு மணியளவில கிளிநொச்சியிலிருந்து விசேஷ வாகனத்தில் சடலம் சாவகச்சேரிககு கொண்டு வரப்பட்டது. கிளிநொச்சியில் சகல ஏறபாடுகளையும அரசாங்க அதிபர் திரு. என. ஜெயநாதன் மேற்கொண்டிருந்தார்.

### லீவில் வந்த....

—1ம் பக்கத் தொடர்

டிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகக் கருத வேண்டியுள்ளது என்றும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிகழ்ந்துள்ள அசம்பாவிதங்களினால் பெருந்தொகையான ஊழியர்கள் வேலையிழந்து தவிக்கும்நிலைமை ஏற்பட்டுள்ளதெனவும் இவ்வாறு பாதிக்கப்பட்ட பல ஊழியர்கள் இணைப்புக் குழுவிடம் இது பற்றி முறையீடு செய்துள்ளதாகவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உங்களுடையதா?

பொலனறுவை நாகலிங்கம் என்பவரது இலங்கை கடற்படை பொது ஊழியர் அடையாள அட்டை (இல T 38) யும், ரி. கே. பூபாலசிங்கம் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரமும் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### பாரதத்தின்....

—1ம பக்கத் தொடர்

நிலையை உருவாகக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை இந்தியா வலியுறுத்திக் கேட்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளின் முகாமகள இந்தியாவில இருப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன சமீபத்தில கூறியது பற்றியும இந்தியா தனது அதிருப்தியை திரு. திலகரத்தினவிடம் தெரிவித்திருந்தது.

### அகதிகளுக்கு...

— 1ம பக்கத் தொடர்

தமிழ் அகதிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள மருத்துவ வசதிகளையிட்டு திருப்தி தெரிவித்திருப்பதாக தமிழ்நாடு சுகாதார அமைச்சர் டாக்டர் ஹண்டே கூறியுள்ளார், இப்பகுதிகளிலுள்ள அகதிகள் முகாம்களை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதைக் கூறினர்.

### பிரபல யாழ் சத்திர...

—1ஆ-ம் பக்கத் தொடர்

நிலையத்துக்குச் சென்றுவிட்டார். சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் சீருடையினர் அந்தக் காரை, அதே இடத்தில நிறுத்தி விட்டுச் சென்றனராம் கார் மீண்டும் டாக்டருடன் சேர்ந்தது.

### கிருபைதிலகன்..

—1- ஆம் பக்கத் தொடர்

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள தமது வீட்டுக்கு இவர் சென்றபோது மனைவி, பிள்ளைகள் உட்பட நூற்றுக்கணக்கான உறவினர், நண்பர்களால் ஆனந்தக் கண்ணீர் ததும்ப வரவேற்கப்பட்டார்.

இவரது வாக்குமூலம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது.

வெள்ளிக்கிழமை காலை கடத்தப்பட்ட பின்னர் இவர் கண்கள் கட்டப்பட்டவாறே கொண்டு செல்லப்பட்டதாகவும், அதன்பின்னர் அரசாங்க அதிபரை இவர் சந்திக்கவில்லையென்றும், இருவரும் கடந்த இரு தினங்களாகத் தனித்தனியாகவே வைத்து விசாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### இவர்கள் மீது..

—1ம் பக்கத் தொடர்

வர்கள், அவ்விடத்தில் சீட்டாடிக் கொண்டு இருந்தவர்களையும், அருகில் நின்றவர்களையும் விசாரணைக்காக அழைத்துச்சென்றனர்.

### வங்கிப்,...

—1ம் பக்கத் தொடர்

பணத்துடன் சேர்த்துக் கடத்தப்பட்ட வங்கிக் கவச வண்டி எங்கும் கைவிட்டிருக்கப்படவில்லை என்றும் அதனைப் பற்றிய தகவல் எதுவுமே கிடைக்கவில்லையென்றும் வங்கி உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்

## மரண அறிவித்தல்

### கனகசபை ஞானச்சந்திரன்

### (முல்லைத்தீவு அரசாங்க அதிபர்)

திரு. க. ஞானச்சந்திரன் சிவபதமடைந்துள்ளார். அன்னார், சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபர் கா. கனகசபை, திருமதி கனகசபை அவர்களின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், சுபோதினி, அமுதினி, நளாயினி, றஜினி, கேதீஸ்வரி, அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரியில் இன்று திங்கட்கிழமை (25 2-85) பிற்பகல் மூன்று (3-00) மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

பொலிஸ் நிலைய வீதி
சாவகச்சேரி

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 24-02-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336;